10.12.2019 2

அ.வ.எண்.23/18

பிடபிள்யு.2

கு.வி.( ராஜம்மாள்)

நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி இரசீது சா.சா.ஆ.1 ஆனது வழக்கிற்கு பின்னிட்டு 19.11.2019ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 20 வருடமாக காய்கறி கடை வைத்து நடத்தி வருவதற்கு லைசென்ஸ் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. காய்கறி கடை நடத்திவருவதற்கு தொழில் வரி கட்டவில்லை. திராசு போட்டு காய்கறி வியாபரம் செய்வதற்கு 3 வருடத்திற்கு ஒருமுறை தராசு முத்திரை போடவேண்டும் என்றும் அந்த தராசு முத்திரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை கேட்காததால் தாக்கல் செய்யவில்லை. நான் காய்க்கறி கடை நடத்திவருவதாக சொல்வது பொய் என்றும், வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்பதற்கு வாதி வீட்டுக்கு எதிர்புறம் காய்கறி கடை நடத்திவருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குமரேசனுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு பத்திரம் பார்த்திருக்கிறேன் . செட்டியாரிடம் கிரையம் வாங்கினார். எப்போது வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 20 வருடத்திற்கு மேல் இருக்கும். குமரேசன் இறந்த பிறகு அவருடைய மனைவி பட்டு என்பவரும், மற்றும் மகள் ராஜேஸ்வரி ஆகியோர் செம்பரையில் உள்ளார்கள். சந்திரசேகர் எனது கணவர் ஆவார். நான் அப்பாவுபிள்ளை மகள் பாக்கியலெட்சுமிடமிருந்து சொத்தை வாங்கினோம். நான் வாங்கி 2 வருடம் ஆகிறது. பாக்கியலெட்சுமிக்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் அவர் அப்பா, அம்மா எழுதி கொடுத்த சொத்தாகும். பாக்கியலெட்சுமியிடமிருந்து எனது கணவர் பெயருக்கு சொத்தை வாங்கினேன். வழக்கு சொத்தான சந்திற்கும் வடக்கில் உள்ள சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்தானது கிழமேல் 28 அடி, தென்வடல் 11-1/2 அடியாகும். செல்லம்மாள் என்பவர் எனது மகள் ஆவார். என் கணவர் பெயரில் வாங்கிய 11-1/2க்கு வடக்கில் உள்ள 11-1/2 அடியை செல்லம்மாள் பெயரில் கிரையம் வாங்கியுள்ளோம். செல்லம்மாள் கிரையம் வாங்கிய சொத்து யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் யோகலெட்சுமியிடமிருந்து வாங்கினார்.

யோகலெட்சுமி, பாக்கியலெட்சுமியும் அக்கா, தங்கை ஆவார்கள். என் கணவர் பெயரில் வாங்கிய சொத்தின் பத்திரம் எங்கள் கை வசம் உள்ளது. பாக்கியலெட்சுமிக்கு அந்த சொத்து எப்படி பாத்தியம் என்பதற்கு நான் கிரையம் பெற்ற சொத்தில் சொல்லியுள்ளார்கள். மூலப்பத்திரமும் என் வசம் உள்ளது. எனக்கு படிக்க தெரியாது. எனது கணவர் பெயரில் ஏற்பட்ட பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அது பி.வா.சா.ஆ.9 ஆகும். நான் வாங்கிய வீட்டில் தான் கடை வைத்து கொண்டு குடியிருந்து வருகிறேன். தென்புறத்தில் பாரதிதாசன் வீடும் அதற்கு அடுத்து சந்தும் அதற்கு அடுத்து எனது வீடும் உள்ளது என்றால் சரிதான். பாரதிதாசன் அவர் வீட்டிற்கு மேற்கில் ரோட்டை ஒட்டி தையல் கடை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்கு பார்த்து தான் வீடும் , தையல் கடையும் உள்ளது. பாரதிதாசன் வீட்டு வாசலில் கடை வைத்து நடத்துவதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் கண்டிருந்தால் அது தவறாகும். நான் கிரையம் வாங்கிய பிறகு தான் அந்த வீட்டில் குடியிருந்து வந்தேன் என்றும் அதற்கு முன்பு அந்த இடத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். குடியான தெருவில் குடியிருந்தேன். பாரதிதாசன் தையல் கடைக்கு நேர் மேலே ஒரு ரூம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த ரூமில் மேற்புறத்தில் ஜன்னலும், ஜன்னலில் சாரல் அடிக்கக்கூடாது என்பதற்காக தகரம் ஒன்றும் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வடபுற சுவருக்கும் வடக்கில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஒரு சாக்கடை வருகிறது என்றால் சரிதான். அவருக்கு பாத்தியப்பட்ட சாக்கடை என்று ஆவணம் பார்த்துள்ளேன். முன்பிலிருந்து தண்ணீர் அதில் தான் வருகிறது. அதற்கான ஆவணம் வாதியிடம் தான் உள்ளது. அந்த சாக்கடை எவ்வளவு காலமாக இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் 30 வருடமாக எனக்கு திருமணமாகி நான் வந்த நாள் முதல் சாக்கடை தண்ணீர் அதில் தான் போகிறது. நான் கிரையம் பெற்ற சொத்தின் கிழக்கில் ஒரு பகுதி காலியாக உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கில் உள்ள ஒரு பகுதியில் ஆஸ்பெட்டாஸ் ஓடு போட்ட கட்டிடம் உள்ளது. அந்த ஆஸ்பெட்டாஸ் ஓடானது வடக்கிலிருந்து தெற்கில் சரிந்து சாக்கடையில் தண்ணீர் விழுமாறு உள்ளது என்றால் சரிதான். ஆதியில் அந்த சாக்கடையானது மண்ணில்

தான் இருந்தது என்றும் அப்பாவு பிள்ளையும், அவரது சகோதரரும் பாகம் பிரித்து கொண்ட பிறகு அவர்களுக்குள் அந்த சாக்கடையானது கட்டப்பட்டது என்று சொன்னால் அது செட்டியாரால் கட்டப்பட்டதாகும். வாதியானவர் அவருடைய மாடியிலிருந்தும், தரை தளத்திலிருந்தும் பிவிசி குழாய் போட்டு ரோட்டை ஒட்டியுள்ள சாக்கடையுடன் சேர்த்துள்ளார் என்றால் சரிதான். அதுபோல் பிவிசி குழாய் போட்டு 4 வருடம் இருக்கும். எதனால் பிவிசி குழாய் போடப்பட்டது என்றால் அப்பாவு வீட்டிற்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு குழாய் போட்டார்கள். வாதி வீட்டிற்கு வடபுறசுவற்றிற்கு அடுத்து எந்த இடமும் இல்லை என்பதால் அப்பாவு பிள்ளை வாரிசுகளிடம் அனுமதி வாங்கி சுவற்றில் பிவிசி குழாய் போட்டு தண்ணீரை வெளியேற்றினார் என்று சொன்னால் சரியல்ல. அது சம்மந்தமாக வாதியின் தகப்பனாருக்கும், அப்பாவு பிள்ளை வகையறாவிற்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் பிவிசி குழாய் போடப்பட்டது என்று சொன்னால் அதுபோல் எதுவும் கிடையாது. எனது பிரமாண வாக்கும்லத்தில் சொல்லியுள்ளது போல் கழிவு நீர் குழாயை பராமரிக்கவும், வீட்டை பராமரிகக்வும் அந்த இடத்தை புழங்கிவந்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது மகளும் வாங்கியுள்ள வீட்டிற்கும் மேற்கில் தான் சிறுமருதூர் ரோடு உள்ளது என்றால் சரிதான். சிறுமருதூர் ரோட்டை நோக்கி தான் நான் கிரையம் வாஙக்கியுள்ள சொத்திற்கும் எனது மகள் கிரையம் வாங்கிய சொத்திற்கும் வாசல் உள்ளது என்றால் சரிதான். சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததா என்றால் ஒரு முறை வந்தது அதை கைவசம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலமானது இலால்குடியில் தட்டச்சு செய்யப்பட்டதாகும். எனது வீட்டிற்கும் தென்புறத்தில் உள்ள 2-1/2 சந்தையும் என் இடத்திற்கும் , செல்லம்மாள் இடத்திற்கும் கீழ்புறத்தில் உள்ள சொத்தையும் பிரதிவாதி அப்பாவு பிள்ளை வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. இடத்தை மட்டும் தான் வாங்கியுள்ளார்கள். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எந்த சம்மனும் வரவில்லை என்றும்

பாரதிதாசன் கேட்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகளும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி முருகானந்தம் அவர் கிரையம் பெற்ற 2-1/2 சந்தில் நடக்கக்கூடாது என்று எங்களை சொன்னதால் அவர் மீது விரோதம் கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.